இலங்கை மேர்ச்சன்ட் வங்கி மற்றும் பினான்ஸ் பீஎல்சி
31.12.2025 முடிவடைந்த ஆண்டிற்கான
நிதி அறிக்கைகள்

Rating 'A (lka)'
Co. Reg. No. PQ 10

இலாப நட்டக்கூற்று	2025 ரூ. 000	2024 ரூ. 000
வருமானம்	**7,904,903**	**7,582,723**
வட்டி மற்றும் வட்டி சார்ந்த வருமானங்கள்	7,243,533	6,207,886
வட்டி மற்றும் வட்டி சார்ந்த செலவீனங்கள்	(4,273,983)	(4,021,096)
தேறிய வட்டி வருமானம்	**2,969,550**	**2,186,790**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	233,879	211,880
கட்டணம் மற்றும் தரகுச் செலவீனங்கள்	(94,055)	(43,332)
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**139,824**	**168,548**
வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்	782,290	804,725
இலாப நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் மீதான தேறிய வருமானம்/(நட்டம்)	(586,908)	257,327
ஏனைய தொழிற்பாட்டு வருமானம்	232,109	100,905
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	**3,536,865**	**3,518,295**
கடன் மற்றும் பிறச்சொத்துக்களுக்கான பெறுமதி இழப்பு அறவீடுகள்/மீள் திரும்பல்கள் மீதான கொடுப்பனவு	111,515	46,193
தேறிய தொழிற்பாட்டு வருமானம்	**3,648,380**	**3,564,488**
தனிப்பட்ட செலவீனங்கள்	(1,500,408)	(1,400,614)
தேய்வு ஏற்பாடு மற்றும் கடன் ஏற்பாடு	(295,628)	(291,078)
ஏனைய தொழிற்பாட்டு செலவினங்கள்	(906,190)	(1,029,665)
மொத்த தொழிற்பாட்டு செலவீனங்கள்	**(2,702,226)**	**(2,721,357)**
துணை நிறுவனங்களின் மீதான முதலீடுகளின் பெறுமதி இடிப்புக்கள்		
துணை நிறுவன முதலீடுகள் மீதான பெறுமதி இழப்பு அறவீடுகள்/மீள் திரும்பல்கள்	**946,154** (29,693)	**843,131** (4,435)
துணை நிறுவனங்களின் முதலீட்டு தாக்கத்தின் பின்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)	**916,461**	**838,696**
நிதியியல் சேவைகள் மீதான வரி	(405,504)	(392,787)
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	**510,957**	**445,909**
வருமான வரித் திரும்பல்	(245,436)	(205,455)
வருடத்திற்கான இலாபம் /(நட்டம்)	**265,522**	**240,454**
பங்கொன்றிற்கான வருமானம்		
சாதாரண பங்கொன்றின் ஆகக் குறைந்த வருமானம் (ரூபா)	0.51	0.46

சீராக்கப்பட்ட வருமானக் கூற்று	2025 ரூ. 000	2024 ரூ. 000
வருடத்திற்கான இலாபம் /(நட்டம்)	**265,522**	**240,454**
ஏனைய விரிவான வருமானம் /(செலவீனங்கள்)		
ஏனைய விரிவான வருமானங்களில் அடுத்தடுத்த கால மறுசீரமைக்கப்படவேண்டிய இலாபம்/(நட்டம்) (தேறிய வரி):		
ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பில் நிதி முதலீடுகளை மீண்டும் அளவிடுவதில் இலாபம்/(நட்டம்)	13,004	2,750
தேறிய ஏனைய விரிவான வருமானங்களில் அடுத்தடுத்த கால மறுசீரமைக்கப்பட வேண்டிய இலாபம் /(நட்டம்)	**13,004**	**2,750**
இலாப நட்டத்திற்கு அடுத்தடுத்தகாலங்களில் மறுசீரமைக்கபடகூடாத ஏனைய விரிவான வருமானம்		
ஓய்வு நன்மை கடப்பாடுமீது உண்மையுரிமை இலாபம்/(நட்டம்)	(37,644)	(45,492)
பிற விரிவான வருமானத்தின் கூறுகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	11,293	13,648
இலாபநட்டத்திற்கு அடுத்தடுத்தகாலங்களில் மறுசீரமைக்கபடகூடாத தேறிய ஏனையவருமானம்/செலவீனங்கள்	**(26,351)**	**(31,844)**
வருடத்திற்கான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(செலவீனம்), தேறியது	(13,347)	(29,094)
வருடத்திற்கான மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம்/(செலவீனம்), தேறியது	**252,175**	**211,360**

நிதி நிலைமை அறிக்கை	2025 ரூ. 000	2024 ரூ. 000
சொத்துக்கள்		
காசு மற்றும் காசுக்கு சமமானவை	618,703	752,190
வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ளபடியான இருப்புக்கள்	-	203,332
நிதி முதலீடுகளின் நியாயமான மதிப்பில் மூலம் இலாபம் அல்லது நட்டம்	7,634,038	8,534,914
கடன்கள் மற்றும் வரவுகளின் மாற்றியமைக்கப்பட்ட செலவு	39,585,583	25,942,008
நிதி முதலீடுகளின் நியாயமான மதிப்பின் மூலம் ஏனைய விரிவான வருமானங்கள்	54	16,554
நிதி முதலீடுகளின் மாற்றியமைக்கப்பட்ட செலவு	4,425,177	3,473,969
ரியல் எஸ்டேட் இருப்பு	26,029	40,446
இணை நிறுவனங்களின் முதலீடுகள்	81,084	81,084
துணை நிறுவனங்களின் முதலீடுகள்	318,568	348,261
முதலீட்டுச் சொத்துக்கள்	-	-
ஆதனம், உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டுச் சொத்துக்கள்	1,080,743	467,355
கட்புலனாகச் சொத்துக்கள்	38,374	61,329
ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்	130,134	91,893
ஏனைய சொத்துக்கள்	449,308	186,673
மொத்தச் சொத்துக்கள்	**54,387,795**	**40,200,008**
பொறுப்புக்கள்		
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	14,889,904	8,144,088
வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	31,792,758	25,956,175
வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் மற்றும் பெற்ற கடன் நிதிகள்	1,821,393	730,033
நடப்பு வரிப் பொறுப்புக்கள்	166,186	209,437
ஏனைய பொறுப்புக்கள்	1,159,257	895,070
ஓய்வூதிய நலன்கள் கடமைகள்	424,091	383,174
மொத்தப் பொறுப்புக்கள்	**50,253,589**	**36,317,977**
மூலதனம்		
கூறப்பட்ட மூலதனம்	4,276,448	4,276,448
நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம்	450,501	392,265
பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள்	(1,011,105)	(1,189,204)
RLA ஒதுக்கங்கள்	418,362	424,622
OIC ஒதுக்கங்கள்	-	(22,100)
மொத்த பங்கு மூலதனம்	**4,134,206**	**3,882,031**
மொத்த பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்	**54,387,795**	**40,200,008**
எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்	61,624	48,858
பங்குக்கான தேறிய சொத்து பெறுமதி (ரூ)	7.88	7.40

தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள்	31/12/2025 உள்ளவாறான (கணக்காய்வுசெய்யப்படாதது)	31/12/2024 உள்ளவாறான (கணக்காய்வுசெய்யப்படாதது)
ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய மூலதனப் போதுமை		
அடிப்படை மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்), ரூ.000	3,379,195	3,079,961
மொத்த மூலதன அடித்தளம், ரூ.000	4,943,210	3,719,619
இடர் நிறைந்த சொத்துக்களின் %ஆக மைய மூலதனப் போதுமை விகிதம் (குறைந்தபட்சத் தேவைப்பாடு, 8.5%)	9.10%	11.97%
இடர் நிறைந்த சொத்துக்களின் %ஆக மொத்த மூலதனப் போதுமை விகிதம் (குறைந்தபட்சத் தேவைப்பாடு, 12.5%)	13.31%	14.45%
மூலதன நிதியிலிருந்து வைப்பு பொறுப்பு விகிதம் (குறைந்தபட்ச தேவை 10%)	19.87%	16.02%
சொத்துக்களின் தரம் (கடன் சொத்துப்பட்டியலின் தரம்)		
மொத்த செயற்படாக் கடன்கள், ரூ '000	3,190,380	3,990,711
மொத்த செயற்படாக் கடன்களின் விகிதம் %	7.39%	14.07%
தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் %	2.41%	4.08%
இலாபத்தன்மை (%)		
வட்டி எல்லை	6.63%	6.52%
சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய)	1.08%	1.21%
பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய் (வரிக்கு பின்)	6.62%	6.37%
ஒழுங்குப்படுத்தல்ப்பட்ட திரவத்தன்மை (ரூபா 000)		
தேவைப்படும் திரவத்தன்மை சொத்துக்களின் ஆகக்குறைந்த பெறுமதி	3,696,294	3,172,545
தற்போதைய திரவச் சொத்துகளின் பெறுமதி	4,472,364	9,697,514
தேவைப்படும் அரசு பத்திரங்களின் ஆகக்குறைந்த பெறுமதி	2,206,919	1,945,408
தற்போதைய அரசு பத்திரங்களின் பெறுமதி	3,760,381	2,991,310
விஞ்ஞாபன தகவல்கள்		
ஊழியர்களின் எண்ணிக்கை	900	870
கிளைகளின் எண்ணிக்கை	47	47

உறுதிப்படுத்துதல்:

மேர்சன்ட் பேங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்தின் நிதிப்பிரிவு தலைவர்,பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இணக்க அதிகாரி நாங்கள் மூவரும் கீழே காட்டபட்டுள்ளவாறு கையொப்பமிட்டு உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டுள்ள படிவங்கள் மற்றும் வரைவிலக்கணங்களுக்கமைய மேற்கண்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன

(ஆ) "கணக்காய்வு செய்யப்படாத" எனக் குறிப்பிடப்படாதபட்சத்தில் இந்தக் கூற்றுக்களில் உள்ள தகவல்கள் அனுமதிபெற்ற நிதிக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)	(ஒப்பம்)	(ஒப்பம்)
ஏ.சி.பி ஏக்கநாயக்க	எச்.கே.டி.டப்ளியு.எம்.டி.கே.ஹபுஹின்ன	டி.எம்.எஸ் பன்டார
பிரதம நிதி அலுவலர்	பிரமத நிறைவேற்று அதிகாரி	இணக்க அதிகாரி
27/03/2026	27/03/2026	27/03/2026

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/H/BOC-S/MBSL/FA/2025/06 මගේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 27 March 2026

தலைவர்
மேர்சன்ட் பேங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ

மேர்சன்ட் பேங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான திருத்தப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்
1.1 அபிப்பிராயம்
மேர்சன்ட் பேங் ஒவ் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சியினதும் ("கம்பனி") மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் ("தொகுதி") 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணியின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இக்கணக்காய்விற்காக பொதுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவகமொன்றின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது.

கம்பனி மற்றும் தொகுதியின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்

1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்
முக்கிய கணக்காய்வு விடயங்கள் என்பது எனது தொழில்சார் தீர்ப்பின் போது நடைமுறை காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களின் எனது கணக்காய்வில் மிக முக்கியத்துவமாக காணப்பட்ட விடயங்களாகும். இந்த விடயங்கள் நிதிக்கூற்றுக்களின் முழுமையான கணக்காய்வின் போதும், அதன்மீது எனது அபிப்பிராயத்தை உருவாக்கலிலும் எடுத்துரைக்கப்பட்டன மற்றும் நான் இந்த விடயங்கள் மீது தனியானதொரு அபிப்பிராயத்தினை வழங்குவதில்லை. பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்காக, அதன் போது எவ்வாறு எனது கணக்காய்வானது விடயத்தினை எடுத்துரைத்தது தொடர்பான எனது விபரம் வழங்கப்பட்டுள்ளது.
இந்த விடயங்களுடன் தொடர்பானவைகளை உள்ளடக்கி எனது அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் பிரிவின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரினது பொறுப்புக்களில் விபரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களினை நான் பூர்த்திசெய்துள்ளேன். அதன்படி, நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்றின் ஆபத்துக்களினை எனது மதிப்பீட்டிற்கு பதிலளிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளின் செயலாற்றலினை எனது அறிக்கை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நடைமுறைகளின் விளைவுகளானது கீழே உள்ள விடயங்களினை எடுத்துரைப்பதற்காக செயற்படுத்தப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கி அதனுடன் சேர்ந்த நிதிக்கூற்றுக்கள் மீது எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குகின்றது.

முக்கிய கணக்காய்வு விடயம்	எமது முக்கிய கணக்காய்வு விடயங்கள் எடுத்துரைக்கப்பட்ட விதம்
பெறுமானக்குறைப்புக் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள் குறிப்பு 23 இல் வெளிப்படுத்தப்பட்டதற்கு அமைய பெறுமானக்குறைப்புக் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 3.5.11 இல் விபரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. இது முக்கிய கணக்காய்வு விடயமொன்றாக இருந்தமைக்கு காரணமாக • எதிர்காலத்தில் அறவிடுவதற்கான கடன்கள் மற்றும் முற்பணங்களினை மதிப்பிடுவதில் குறிப்பிடத்தக்க முகாமைத்துவ தீர்மானங்கள், எடுகோள்கள் மற்றும் நிச்சயமற்ற மதிப்பீடு ஆகியவற்றின் ஈடுபாடு மற்றும் • எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான கொடுப்பனவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகையின் பொருண்மை எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான பெறுமதி இழப்பு தொடர்பான மதிப்பீட்டில் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க தீர்ப்புக்களை, எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றின் முக்கிய பரப்புக்களானவை, கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானித்தல், முன்னோக்கிய பேரினப்பொருளாதார உள்ளீடுகள் மற்றும் அதனுடன் தொடர்பான நிறையிடல் என்பவற்றை பயன்படுத்தல் உள்ளடக்குகின்றன.இவை இயல்பாக உயர்ந்த நிச்சயமற்ற மதிப்பீடு மற்றும் உள்ளார்ந்த தன்மைக்கு உட்பட்டவை. மேலும், முக்கிய மதிப்பீடுகள், எடுகோள்கள் மற்றும் தீர்ப்புக்கள் போன்ற தகவல்கள் குறிப்பு 3.5.11. இல் வெளிப்படுத்தப்படுகின்றன.	பெறுமானக்குறைப்புக் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான கொடுப்பனவுகளை எடுத்துரைக்கும் போது எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளினை உள்ளடக்கியது: • எனது அறிக்கையிடும் திகதி வரை காணப்பட்ட சிறந்த தகவலின் அடிப்படையில், தொடர்புடைய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அடிப்படை வழிமுறையுடன் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட கணிப்பீட்டிக்கான கம்பனியின் கொடுப்பனவுகளின் பொருத்தபாட்டினை மதிப்பீடு செய்தமை. • எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களின் மதிப்பீட்டின் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, நடைமுறைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு விளைதிறன் ஆகியவற்றினை மதிப்பீடு செய்தமை. • எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான கொடுப்பனவுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக சபை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை, மீளாய்வு மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றின் அளவை மதிப்பிட்டமை. • கம்பனியின் பொருத்தமான மூல ஆவணங்கள் மற்றும் கணக்கீட்டு பதிவுகள் என்பவற்றின் விபரங்களிற்கு இணங்குவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட கணிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை தரவின் முழுமை, செம்மை மற்றும் நியாயமான தன்மை என்பவற்றினை பரிசோதனை செய்தமை. • கடன் தர மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய நிலை வகைப்படுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட பண்பு மற்றும் அளவு ரீதியான காரணிகள் என்பவற்றின் நியாயமான தன்மையினை மதிப்பீடு செய்தமை. • மேற்கூறியவற்றுடன் மேலதிகமாக ,பின்வரும் நடைமுறைகளும் நிறைவேற்றப்பட்டன: △ **பெறுமதி இழப்பு நட்டங்களிற்காக தனிநபர் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிற்காக:** • எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான கொடுப்பனவுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய உள்ளீடுகளின் நியாயமானதன்மை மதிப்பீடு செய்யப்பட்டடது. குறிப்பாக பிணையங்களின் அறவீட்டு நடவடிக்கையின் நிலைகள் மற்றும் உயர் இடர் தொழில் துறைகள் தொடர்பான காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களின் மதிப்பு மற்றும் நேரம் ஆகியவற்றினை கருத்திற்கொண்டு அத்தகைய மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டன. • அடிப்படை தனிநபர் பெறுமதி இழப்பு கணிப்பீடுகளின் எண் கணித செம்மை பரீட்சிக்கப்பட்டது. △ **பெறுமதி இழப்பு நட்டங்களிற்கான திரண்ட அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிற்காக:** • எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களிற்கான கொடுப்பனவில் பயன்படுத்தப்பட்ட முக்கிய உள்ளீடுகள் மற்றும் கணிப்பீடுகள் பரீட்சிக்கப்பட்டது. • இசீஎல்(ECL) கொடுப்பனவுகளுக்கான மேலடுக்குகள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் எந்தவொரு பரிசீலனையும் உட்பட அடிப்படை கள்வழிமுறைகள் மற்றும் முகாமைத்துவத்தின் தீர்ப்புக்கள், எடுகோள்கள், மதிப்பீடுகள் என்பவற்றின் நியாயமான தன்மை மதிப்பிடப்பட்டது. • பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிய தகவல்கள், கருத்திற்கொள்ளப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஒதுக்கபட்ட நிகழ்தகவு நிறையிடல் என்பவற்றின் நியாயமான தன்மையின் மதிப்பிடலானவை எங்களின் சோதனையில் உள்ளடங்கியுள்ளது குறிப்பு 3.5.11,23 மற்றும் 48.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய நிதிக் கூற்று வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை மதிப்பிடப்பட்டது.
நிதி அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான தகவல் தொழில்நுட்ப (IT) முறைமைகள் கம்பனியின் நிதி அறிக்கை செயன்முறையானது தானியக்க செயல்முறைகளுடனான பல்வேறு தகவல் தொழில்நுட்ப (IT) முறைமைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் மீது குறிப்பிடத்தக்களவு சார்ந்துள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்ப (IT) முறைமைகளினால் உருவாக்கப்பட்ட தரவு மற்றும் அறிக்கைகள் என்பவற்றினை பயன்படுத்தி முக்கிய நிதிக்கூற்று வெளிப்படுத்தல்கள் தயாரிக்கப்படுகின்றன. அவைகள் விரிதாளின் உதவியுடன் தொகுக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. அதன்படி, நிதி அறிக்கையிடல் மீதான தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) முறைமைகள் முக்கிய கணக்காய்வு விடயமாக இனங்காணப்பட்டது.	எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வரும் முக்கிய நடைமுறைகளினை உள்ளடக்குகின்றது: • செயன்முறைகளின் உள்ளக கட்டுப்பாட்டு சூழல் பற்றிய புரிதல் பெறப்பட்டமையையும், நிதி அறிக்கையிடல் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக பொருத்தமான முக்கிய கட்டுப்பாடுகள் பரிசோதனை செய்யப்பட்டமையும். • எங்களின் உள்ளக ரீதியாக நிபுணத்துவமிக்க வளங்கள் ஈடுபட்டமை மற்றும் • பயனர் அணுகல் மற்றும் மாற்றல் முகாமைத்துவம் என்வவற்றை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப (IT) முறைமை தொடர்பான உள்ளகக்கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயற்பாட்டு விளைதிறனை இனங்கண்டமை, மதிப்பிட்டமை மற்றும் பரீட்சித்தமை, மற்றும்; • கம்பனியினை பாதிக்கும் சைபர் பாதுகாப்பு (Cyber Security) இடர்கள் மற்றும் முதன்மையான விசாரணைகள் மூலம் இந்த இடர்களினை எடுத்துரைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பவற்றின் உயர் மட்ட புரிதல் பெற்றுக்கொண்டமை பொதுப் பேரேட்டு இணக்கங்களின் மீளாய்வு உள்ளடங்களாக செம்மை மற்றும் முழுமை ஆகியவற்றிற்கான வெளிப்படுத்தல்களினை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட அறிக்கைகளின் மூல தரவு பரீட்சிக்கப்பட்டது.

1.4 தொகுதியின் 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்
இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் குறிப்பிடப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்த அல்லது முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.
நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.
ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். தொடர்ந்தும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்
இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொகுதியின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவத்தினால் தொகுதியனை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் தொகுதியின் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான மேற்பார்வை, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் பொறுப்பு வகிக்கப்படுகின்றது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடிடிமான வகையில் அவைகளின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளினை கம்பனி மற்றும் தொகுதி பேணப்படுதல் வேண்டும்.

1.